12. 08.16

தினத் தந்தி

## கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை வீழ்ச்சி ஒரு கிலோ வெண்டைக்காய், தக்காளி தலா ரூ.8–க்கு விற்பனை



சென்னை,

கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு கிலோ வெண்டைக்காய், தக்காளி தலா ரூ.8–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

<u>காய்கறிகள் விலை வீழ்ச்சி</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த மாதத்தின் தொடக்கத்தில் காய்கறிகள் விலை உயர்ந்து இருந்தது. அதன்பின்னர், காய்கறிகள் விலை குறைந்து கொண்டே வருகிறது. இந்த நிலையில் மீண்டும் காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஒரு நேரத்தில் விலை உச்சத்தில் இருந்த தக்காளி, முருங்கைக்காய், வெண்டைக்காய், பீன்ஸ், அவரைக்காய் ஆகியவற்றின் விலை தற்போது பெருமளவில் குறைந்துள்ளது. குறிப்பாக தக்காளி, வெண்டைக்காய் விலை படுவீழ்ச்சி அடைந்துள்ளது. இந்த 2 காய்கறிகளும் ஒரு கிலோ ரூ.8–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:– <u>வாங்கும் சக்தி குறைவு</u>

கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த சில மாதங்களாக விலை உயர்ந்து காணப்பட்ட காய்கறிகள் அனைத்தும் தற்போது வீழ்ச்சி அடைந்துள்ளது. தக்காளி, வெண்டைக்காய் ஆகியவற்றின் விலை அதிகளவில் குறைந்துள்ளது. வரத்து ஓரளவு தேவைக்கு ஏற்ப மார்க்கெட்டுக்கு வருகிறது. அதுமட்டுமல்லாமல், மக்களிடம் வாங்கும் சக்தியும் பெருமளவில் குறைந்துவிட்டது. இந்த 2 காரணங்களால் தான் காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

மார்க்கெட்டுக்கு நாள் ஒன்றுக்கு 210 முதல் 230 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இந்த விலை நிலவரம் இன்னும் 15 முதல் 20 நாட்களுக்கு நீடிக்கும். அதன்பிறகு விலை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. இன்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம்(ஒரு கிலோ) வருமாறு:–

<u>விலை பட்டியல்</u>

கத்தரிக்காய் – ரூ.15 முதல் ரூ.20 வரை, வெண்டைக்காய் – ரூ.8, உருளைக்கிழங்கு – ரூ.25, பல்லாரி – ரூ.15 முதல் ரூ.20 வரை, பீன்ஸ் – ரூ.10 முதல் ரூ.15 வரை, அவரைக்காய் – ரூ.30, நூக்கல் – ரூ.20, சவ்சவ் – ரூ.15, பீட்ரூட் – ரூ.10, முட்டைக்கோஸ் – ரூ.20, மிளகாய் – ரூ.25 முதல் ரூ.40 வரை, இஞ்சி (பழையது) – ரூ.60, இஞ்சி (புதியது) – ரூ.20 முதல் ரூ.25 வரை, கோவைக்காய் – ரூ.20, காலிபிளவர் – ரூ.20, வெள்ளரி – ரூ.20, புடலங்காய் – ரூ.20, தக்காளி – ரூ.8 முதல் ரூ.10 வரை, முருங்கைக்காய் – ரூ.40, சாம்பார் வெங்காயம் – ரூ.20 முதல் ரூ.30 வரை, சேனைக்கிழங்கு – ரூ.25, சேப்பக்கிழங்கு – ரூ.25, முள்ளங்கி – ரூ.20, சுரைக்காய் – ரூ.8 முதல் ரூ.10 வரை, பீர்க்கங்காய் – 20, தேங்காய் (காய் ஒன்று) – ரூ.8 முதல் ரூ.15 வரை, வாழைக்காய் (காய் ஒன்று) – ரூ.10. இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண்மை இடுபொருட்கள் விற்பனையாளர் சங்க கூட்டம்



கரூர் மாவட்ட வேளாண்மை இடு பொருட்கள் விற்பனையாளர்கள் சங்க முதலாம்ஆண்டு பொதுக்குழு கூட்டம் கரூரில் உள்ள ஒரு ஒட்டலில் நடந்தது. கூட்டத்துக்கு சங்கத்தின் மாநில துணைத்தலைவர் மோகன் தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் சண்முகநாதன், கவுரவ தலைவர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை இணை இயக்குனர் அல்தாப் கலந்து கொண்டு வேளாண்மை துறைக்கு அரசு அளிக்கும் பல்வேறு திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். கூட்டத்தில் மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் சேகர், சங்க பொருளாளர் கனகராஜ் உள்பட வேளாண்மை துறை உதவி இயக்குனர்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக சங்க தலைவர் மாணிக்கம் வரவேற்றார். முடிவில் சங்க செயலாளர் சிவசுப்பிரமணி நன்றி கூறினார்.

## நாமக்கல்லில் 2,900 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம்



நாமக்கல்,

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 2,900 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி, புதுச்சத்திரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 2,900 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

<u>ரூ.60 லட்சத்துக்கு ஏலம்</u>

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்து 799 முதல் ரூ.6 ஆயிரத்து 330 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 849 முதல் ரூ.6 ஆயிரத்து 399 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம், கரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## தஞ்சையில் இருந்து கோவைக்கு அரவைக்காக 900 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் அரவைக்காக 900 டன் நெல் கோவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்,

தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு சொந்தமான சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுவதோடு, தமிழகத்தில் திருவள்ளூர், மதுரை, சென்னை, விழுப்புரம், புதுக்கோட்டை உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படும். இந்த நெல் மூட்டைகள் சரக்கு ரெயில்களிலும், லாரிகள் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும். 900 டன் நெல் இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டு பிள்ளையார்பட்டி, பருத்தியப்பர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு இருந்த நெல்மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. இதே போல் கொள்முதல் நிலையங்களில் இருந்தும் லாரிகளில் நெல்மூட்டைகள் ஏற்றி வரப்பட்டன. இவ்வாறு ஏற்றிவரப்பட்ட 900 டன் நெல் மூட்டைகள் சரக்கு ரெயிலின் 24 பெட்டிகளில் கோவைக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

## தஞ்சை காமராஜர் மார்க்கெட்டில் காய்கறிகள் விலை வீழ்ச்சி ஒரு கிலோ தக்காளி ரூ.8–க்கு விற்பனை



தஞ்சை காமராஜர் மார்க்கெட்டில் காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு கிலோ தக்காளி ரூ.8–க்கு விற்பனை செய்யப்பட்டது.

காய்கறிகள் விலை வீழ்ச்சி

தஞ்சை அரண்மனை வளாகம் அருகே காமராஜர் மார்க்கெட் உள்ளது. இங்கு 350–க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. இந்த மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கர்நாடகா, ஓசூர், பழனி, உடுமலைப்பேட்டை, ஒட்டன்சத்திரம் மற்றும் தஞ்சையை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இங்கு கடந்த மாதம் தொடக்கத்தில் காய்கறிகள் விலை உயர்ந்து இருந்தது. குறிப்பாக ஒரு கிலோ தக்காளி ரூ.80–க்கு விற்பனை செய்யப்பட்டது.

அதன்பின்னர் தக்காளி வரத்து அதிகரிக்க தொடங்கியதால் தக்காளி விலை படுவீழ்ச்சியை அடைந்துள்ளது. அதேபோல் வெண்டைக்காய், சவ்சவ், பீட்ரூட், பாகற்காய், அவரைக்காய், சின்னவெங்காயம் போன்ற காய்கறிகளின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. காய்கறிகள் விலை குறைந்து காணப்பட்டாலும் மக்களிடம் வாங்கும் சக்தியும் பெருமளவில் குறைந்துவிட்டது. தஞ்சையில் நேற்றுகாலையில் ஒரு கிலோ தக்காளி ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டது. மாலையில் மேலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டு ஒரு கிலோ தக்காளி ரூ.8–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதுவும் கூவி, கூவி தக்காளியை வியாபாரிகள் விற்பனை செய்தனர்.

விலை நிலவரம்

தஞ்சை காமராஜர் மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம்(ஒருகிலோ) வருமாறு:–

தக்காளி – ரூ.8 முதல் ரூ.10 வரை, கத்தரிக்காய் – ரூ.10 முதல் ரூ.15 வரை, சவ்சவ் – ரூ.24, முள்ளங்கி – ரூ.20, இஞ்சி(பழையது) – ரூ.70, புடலங்காய் – ரூ.20 முதல் ரூ.24 வரை, வெண்டைக்காய் – ரூ.16, பாகற்காய் – ரூ.30, கருணை கிழங்கு – ரூ.50, முருங்கைக்காய் – ரூ.15 முதல் ரூ.20 வரை, உருளைக்கிழங்கு – ரூ.26, பீட்ரூட் – ரூ.20, பச்சை மிளகாய் – ரூ.40, பல்லாரி – ரூ.18, முட்டைக்கோஸ் – ரூ.16, காலிப்பிளவர் – ரூ.40, சின்ன வெங்காயம் – ரூ.24, வெள்ளரி – ரூ.30, அவரைக்காய் – ரூ.40.

தற்போது காய்கறிகள் விலை வீழ்ச்சி ஏற்பட்டாலும் ஆவணி மாதம் தொடங்கியவுடன் காய்கறிகளின் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தேனி மாவட்டத்தில் மீன்வளர்ப்பு குளங்கள் அமைக்க மானியம் கலெக்டர் வெங்கடாசலம் தகவல்




தேனி மாவட்டத்தில் மீன் வளர்ப்பு குளங்கள் அமைக்க ரூ.2 லட்சத்து 10 ஆயிரம் மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

மீன் வளர்ப்பு குளங்கள்

இதுகுறித்து தேனி மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2016–17–ம் ஆண்டில் சொந்த நிலத்தில் மீன் வளர்ப்பு குளங்கள் அமைப்பதற்கு அரசு மானியம் வழங்கப்பட உள்ளது. ஒரு ஹெக்டேர் பரப்பளவில் சொந்த நிலத்தில் ரூ.5 லட்சம் செலவில் மீன் வளர்ப்பு குளங்கள் அமைப்பதற்கு அதிகபட்சமாக ரூ.2 லட்சம் மற்றும் மீன் குஞ்சுகள் வாங்குவதற்கு ரூ.10 ஆயிரம் என மொத்தம் ரூ.2 லட்சத்து 10 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

பின்னிலை மானியமாக இது அளிக்கப்படும். எனவே ஒரு ஹெக்டேர் பரப்பளவில் மீன் வளர்ப்பு குளம் அமைக்க விரும்புபவர்களிடம் இருந்து மீன் வளத்துறை சார்பில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

விண்ணப்பிக்கலாம்

புதிதாக மீன் வளர்ப்பு குளங்கள் அமைக்க விரும்பும் பயனாளிகள், சொந்த நிலம் அல்லது 10 ஆண்டு கால குத்தகைக்கு பெற்ற நிலம் வைத்து இருக்க வேண்டும். அதிக அளவில் விண்ணப்பங்கள் வந்தால், முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

எனவே விருப்பம் உள்ள விவசாயிகள் ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை பகுதியில் அமைந்துள்ள மீன்வளத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் இதற்கான விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து அதே அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் முதல்–அமைச்சருக்கு தட்சணமாற நாடார் சங்கம் கோரிக்கை



நெல்லை,

அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று முதல்–அமைச்சருக்கு தட்சணமாற நாடார் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

**நிர்வாக சபை கூட்டம்**

நெல்லை தட்சணமாற நாடார் சங்கத்தின் நிர்வாக சபை கூட்டம் குற்றாலத்தில் நடந்தது. கூட்டத்திற்கு தலைவர் சபாபதி நாடார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் சென்னையை தலைமையிடமாக கொண்டு புதிதாக தட்சணமாற நாடார் சங்க கிளை தொடங்கப்பட்டது.

இந்த கிளைக்கு தலைவராக ஆர்.செல்வராஜ், செயலாளராக டி. விஜயா சந்திரன், பொருளாளராக ஜி.ராஜன் நாடார் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

**தள்ளுபடி செய்ய வேண்டும்**

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் பணிபுரியும் ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 58–ல் இருந்து 60 ஆக உயர்த்த வேண்டும். தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் ஊழியர்கள் நியமன குழுவில் தட்சணமாற நாடார் சங்கத்தையும், நாடார் மகாஜன சங்கத்தையும் சேர்க்க வேண்டும்.

தொடர்ந்து தமிழக முதல்–அமைச்சராக பதவியேற்ற ஜெயலலிதாவுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விவசாய கடன் தள்ளுபடி செய்ததற்கு முதல்–அமைச்சருக்கு நன்றி. அதே நேரத்தில் அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கலந்து கொண்டோர்**

கூட்டத்தில் தட்சணமாற நாடார் சங்க செயலாளர் ஆர்.சண்முகவேல் நாடார், பொருளாளர் ஏ.செல்வராஜ் நாடார், துணை செயலாளர் த.முருகேச பாண்டி நாடார் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், மும்பை கிளை சங்க தலைவர் ஏ.ராமராஜா நாடார், செயலாளர் எம்.எஸ். காசிலிங்கம் நாடார், பொருளாளர் மைக்கேல் ஜார்ஜ் நாடார், துணை தலைவர் டி.எம். ரேம்ஜிஸ் நாடார், உறுப்பினர்கள் கோயில்ராஜ் நாடார், ஜெபக்குமார் ஜேக்கப் நாடார், ஜெயராமன் நாடார், எஸ்.கோபால் ராஜா நாடார், லிங்கதுரை நாடார், திண்டுக்கல் நாடார் உறவின்முறை எஸ்.டி.பி.கனகசபை நாடார், ஆடிட்டர் சிற்றம்பல நடராஜன், வி.எஸ்.தர்மராஜ் நாடார், எஸ்.சங்கர நாராயணன் நாடார் ஆகியோர் கலந்து கொண்டனர்

## திருச்சி மாவட்டத்தில் உரமூட்டைகளின் விலை குறைப்பு கலெக்டர் பழனிசாமி தகவல்



திருச்சி

திருச்சி மாவட்டத்தில் உரமூட்டைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் பழனிசாமி கூறி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

உரம் விலை குறைப்பு

சர்வதேச சந்தையில் பொட்டாஷ் உரங்களின் விலை மற்றும் மணிசத்து உரங்களின் தயாரிப்புக்கு தேவைப்படும் பாஸ்பாரிக் அமிலத்தின் விலை குறைந்துள்ளது. இதனை தொடர்ந்து உரத் தயாரிப்பு நிறுவனங்கள் கடந்த 3–ந்தேதி முதல் 50 கிலோ கொண்ட உர மூட்டைகளின் விலையினை குறைத்துள்ளனர். இப்கோ நிறுவனத்தின் 50 கிலோ கொண்ட டி.ஏ.பி உரத்தின் விலை ரூ.1,185–லிருந்து ரூ.1,100 எனவும், 20:20:0:13 கூட்டுரத்தின் விலை ரூ.875–லிருந்து ரூ.825 எனவும், 10:26:26 கூட்டுரத்தின் விலை ரூ.1,080–லிருந்து ரூ.1,030 எனவும் குறைக்கப்பட்டுள்ளது. கிரிப்கோ நிறுவனத்தின் டி.ஏ.பி உரத்தின் விலை ரூ.1,210–லிருந்து ரூ.1,135 எனவும், 20:20:0:13 கூட்டுரத்தின் விலை ரூ.875–லிருந்து ரூ.825 எனவும், பொட்டாஷ் உரத்தின் விலை ரூ.800–லிருந்து ரூ.550 எனவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியன் பொட்டாஷ் நிறுவனத்தின் டி.ஏ.பி உரத்தின் விலை ரூ.1,210–லிருந்து ரூ.1,085 எனவும், 20:20:0:13 கூட்டுரத்தின் விலை ரூ.905–லிருந்து ரூ.855 எனவும், 16:16:16 கூட்டுரத்தின் விலை ரூ.900–லிருந்து ரூ.850 எனவும், 15:15:15:9 கூட்டுரத்தின் விலை ரூ.890–லிருந்து ரூ.840 எனவும், பொட்டாஷ் உரத்தின் விலை ரூ.750–லிருந்து ரூ.550 எனவும், பாக்ட் நிறுவனத்தின் 50 கிலோ கொண்ட 20:20:0:13 கூட்டுரத்தின் விலை ரூ.909–லிருந்து ரூ.889 எனவும் குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

விற்பனை நிலையங்கள் மீது நடவடிக்கை

ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் நிறுவனத்தின் 50 கிலோ கொண்ட டி.ஏ.பி உரத்தின் விலை ரூ.1,205–லிருந்து ரூ.1,100 எனவும், பொட்டாஷ் உரத்தின் விலை ரூ.825–லிருந்து ரூ.550 எனவும், மங்களூர் கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் நிறுவனத்தின் 50 கிலோ கொண்ட டி.ஏ.பி உரத்தின் விலை ரூ.1,190–லிருந்து ரூ.1,100 எனவும், பொட்டாஷ் உரத்தின் விலை ரூ.800–லிருந்து ரூ.550 எனவும், 20:20:0:13 கூட்டுரத்தின் விலை ரூ.913–லிருந்து ரூ.865 எனவும், ஸ்பிக் நிறுவனத்தின் டி.ஏ.பி உரத்தின் விலை ரூ.1,275–லிருந்து ரூ.1,150 எனவும், 20:20:0:13 கூட்டுரத்தின் விலை ரூ.925–லிருந்து ரூ.875 எனவும் குறைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யும் உர விற்பனை நிலையங்கள் மீது உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985–ன் கீழ் உர விற்பனை முடக்கம் செய்யப்படும்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

## சாத்திவயல் கிராமத்தில் புது மண்புழு இயற்கை உரம் தயாரிப்பு கூடத்தை கலெக்டர் ஆய்வு




ஆவூர்,

விராலிமலை ஒன்றியம் பேராம்பூர் ஊராட்சி சாத்திவயல் கிராமத்தில் ஊராட்சி நிர்வாகத்தின் சார்பில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மண்புழு இயற்கை உரம் தயாரிப்பு கூடம் மற்றும் மரக்கன்றுகள் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை மாவட்ட கலெக்டர் கணேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர், மாவட்டத்திலேயே முன்மாதிரி கிராமமாக இங்கு அமைக்கப்பட்டுள்ள மண்புழு இயற்கை உரக்கிடங்கு மூலம் ஊராட்சிக்கு வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அருகில்

குளங்களில் உள்ள சீமைகருவேல மரங்களை வேரோடு அகற்றிவிட்டு அங்கு நாவல், நெல்லி, புங்கன், வேம்பு போன்ற பயன்தரக்கூடிய மரங்களை நடவேண்டும் என்றும் ஆலோசனை கூறினார். இதைத்தொடர்ந்து பேராம்பூரில் அமைக்கப்பட்டுள்ள குப்பை தரம் பிரிக்கும் கூடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சந்தோஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் தனபால், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதயகுமாரி, விஜயநாதன், விராலிமலை துணை தாசில்தார் சதீஷ், ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், துணை தலைவர் சந்தனம் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

தினகரன்

### தென்னை நார் உற்பத்தியை நவீனமயமாக்க ஒத்துழைப்பு மத்திய கயிறு வாரிய தலைவர் உறுதி

பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபை கூட்ட அரங்கில் நேற்று, தென்னை நாருக்கு குறைந்தபட்ச விலை குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மத்திய கயிறு வாரிய தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். செயலாளர் குமாரராஜா முன்னிலை வகித்தார். தென்னை நார் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின்போது மத்திய கயிறு வாரிய தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியதாவது: தென்னை நார் விலை தற்போது குறைந்துள்ளது.இந்த தொழிலை பாதுகாக்கும் பொருட்டும், அதனை நம்பியுள்ள தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டும்,தென்னை நாருக்கான குறைந்தபட்ச விலையாக முதல்தரம் ரூ.12, இரண்டாம் தரம் ரூ.8 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.மேலும், நார் ஏற்றுமதியை பொறுத்தும் அதன் விலை ஏற்றம், இறக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்னை நார் உற்பத்தியை நவீனமயமாக்க முழு ஒத்துழைப்பு அளிப்பதுடன், தரமான நார் உற்பத்தி செய்யவும் மத்திய கயிறு வாரியம் ஊக்குவிக்கும். தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தமொழி, மதுரை, தர்மபுரி ஆகிய இடங்கில்

தென்னை நார் கூட்டு குழுமங்கள் ஏற்படுத்தப்படுகிறது. மேலும், மழைக்காலங்களில் நார் தொழில் பாதிக்காமல் இருக்க மாற்றுப்பணி மற்றும் தொழிலாளர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்த பயிற்சி அளிக்கப்பட உள்ளது. தமிழகத்தில் தென்னை நார் தொழிற்சாலைகளில் வட மாநில தொழிலாளர்கள் அதிகம் வேலை பார்க்கின்றனர். அவர்களின் ஆதார் கார்டு உள்ளிட்ட ஆவணங்கள் முறையாக சரிபார்க்கப்பட்டு, இந்த தொழிலில் ஈடுபடுத்தப்படுவர். நார் தொழிற்சாலைகளில் 100 நாள் வேலை உறுதி திட்ட பயனாளிகளை ஈடுபடுத்துவது குறித்து, தமிழக அரசு தான் முடிவு செய்ய வேண்டும். இவ்வாறுசி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

**ஊடு பயிராக பயிரிட சோளம் ஏற்றது வேளாண்துறை அறிவுரை**

ஊடுபயிராகப் பயிரிடுவதற்கு சோளம் ஏற்ற பயிரென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர். சோளம் பயிரிட கோ.எஸ் 28, கோ (எஸ்) 30, வீரிய ஒட்டுச்சோளம் கோ 5 ஆகியவை ஏற்ற ரகங்களாகும். பயிர் அறுவடைக்குப் பின் சட்டிக்கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். இறவை நிலத்திற்கு ஹெக்டேருக்கு 10 கிலோவும், மானாவாரி நிலத்திற்கு ஹெக்டேருக்கு 15 கிலோ விதைகள் தேவைப்படும். 45*15 சென்டிமீட்டர் அல்லது 45*10 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். விதைகளை 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் என்ற அளவில் தண்ணீரில் 6 மணி நேரம் ஊற வைத்த பிறகு 5 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 600 கிராம் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பு செய்த 3ம் நாளும், பின் 10 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மக்கிய தொழு உரம், நுண்சத்து, மக்கிய தென்னைநார் கழிவுடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியம், சாம்பல் சத்து, தழை மற்றும் மணிச்சத்து போன்றவற்றை வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். விதைத்த 30 நாட்களில் களை எடுக்க வேண்டும்.

சோளம் தனிப்பயிராகப் பயிரிடும்போது அட்ரசின் என்ற களைக்கொல்லியைத் தெளிக்க வேண்டும். சோளத்தை ஊடுபயிராகப் பயிரிடும்போது அலகுளோர் என்ற களைக்கொல்லி மருந்தைப் பயன்படுத்த வேண்டும். குருத்து ஈ, தண்டு துளைப்பான், கதிர்நாவாய், செம்பேன், துரு நோய், தேன் ஒழுகல் நோய், கதிர் பூசாண நோய், அடிச்சாம்பல் நோய் போன்றவை ஏற்பட்டால் வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உரிய மருந்துகளை தெளிக்க வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். இதுதொடர்பான

கூடுதல் விவரங்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**முடங்கிக் கிடக்கும் ஸ்பைசஸ் பார்க் விவசாயி, வர்த்தகர்களுக்கு விடிவு காலம் பிறக்குமா?**

சிவகங்கை அருகே முத்துப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்பைசஸ் பார்க்கை இப்பகுதியில் உள்ள விவசாயிகள், வர்த்தகர்கள் பயன்பெறும் வகையில் முழுமையாக செயல்படுத்தப்படாத நிலையில் உள்ளது. சிவகங்கை அருகே முத்துப்பட்டியில் மத்திய அரசு சார்பில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில், ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஸ்பைசஸ் பார்க் (தொழில் பூங்கா) கடந்த 2013ம் ஆண்டு திறக்கப்பட்டது. இதில் 40 பிளாட்கள் அமைக்கப்பட்டது. வாசனை பயிர்களான மிளகாய், மல்லி, மஞ்சள், இஞ்சி, பெருங்காயம் முதலியவற்றை மதிப்பு கூட்டி, நவீன இயந்திரங்கள் மூலம் பேக்கிங் செய்யப்பட்டு வெளி நாடுகள், வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் இப்பூங்கா அமைக்கப்பட்டது. இங்கு தொழில் தொடங்குபவர்களுக்கு வங்கி கடனுதவி மற்றும் மத்திய அரசின் 33 சதவீத மானியம் கிடைக்கும். பூங்கா முழுமையாக செயல்படும் நிலையில் ஏற்றுமதி வணிகம் மூலம் ரூ.1500 கோடி வருவாயும், சுமார் 2ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் திட்டமிடப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மிளகாய் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்த சிவகங்கை மாவட்டத்தில் மீண்டும் மிளகாய் உற்பத்தியை பெருக்கும் வகையில் இப்பூங்காவை அப்போதைய மத்திய அரசு அமைத்தது. சிவகங்கை, ராமநாதபுரத்தை சேர்ந்த விவசாயிகள் வாசனை பொருட்களை இங்கு கொண்டுவந்து அரைத்து ஏற்றுமதி செய்யும் வகையில் திறக்கப்பட்ட இந்த ஸ்பைசஸ் பூங்கா இதுவரை முழுமையான செயல்பாட்டிற்கு வரவில்லை. 40 பிளாட்களில் சில பிளாட்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடக்கிறது. இதனால் இப்பகுதி விவசாயிகளுக்கோ, வர்த்தகர்களுக்கோ எவ்வித பயனும் இல்லை என வர்த்தகர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சிவகங்கை வர்த்தகர்கள் சிலர் கூறுகையில், " அன்றைய மத்திய அரசு இப்பூங்காவை அமைத்ததன் நோக்கமே வறட்சி மாவட்டமான சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள், வியாபாரிகளின் நலனை கருத்தில் கொண்டுதான். விவசாயிகள், வர்த்தகர்கள் இங்குள்ள பிளாட்டுகளை குத்தகைக்கு எடுக்கும் வகையில்தான் பூங்கா அமைக்கப்பட்டது. இதனால் இப்பகுதியை சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும். ஆனால், பூங்கா முழுமையாக செயல்படாமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள

வர்த்தகர்கள் சென்றால் இப்பகுதியில் விளையும் பொருட்களை கொண்டு எதுவும் செய்ய முடியாது. வேறு மாநிலத்தில் விளையும் பொருட்களில் தான் அதிக காரம், வாசம் உள்ளது என அலைக்கழிக்கும் வகையில் நிர்வாகத்தினர் செயல்படுகின்றனர். இதனால் இப்பகுதி விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் எவ்வித பயனும் இல்லை. இன்னும் சில ஆண்டுகள் சென்றால் இந்த பூங்காவினால் எவ்வித பயன்பாடும் இல்லை என முழுமையாக முடக்கப்படும். எனவே, அவ்வாறு இல்லாமல் முந்தைய மத்திய அரசின் திட்டப்படியே தொழில் பூங்காவை செயல்படுத்த வேண்டும். இதனால் இப்பகுதியினருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதற்கு மாநில அரசும், மத்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

சம்பா நடவிற்கு முன் தக்கைப்பூண்டை விதைத்தால் அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். இது குறித்து தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தில் பாசன வசதிபெறும் நிலங்களில் சம்பா நடவிற்கு 45 நாட்கள் முன்னதாக தக்கைபூண்டு (அ) சணப்பை விதைகள் விதைக்க இதுவே ஏற்ற தருணமாகும்.

இதனால் சாண எரு இடவேண்டிய அவசியமில்லை. விதைத்த 35, 45 நாட்களுக்குள் பசுந்தாளுரப் பயிர்களுடன் வயலில் சூப்பர் பாஸ்பேட் உரம் ஏக்கருக்கு 1 மூட்டை வீதம் இட்டு மடக்கி அழுத்தி 5, 7 நாட்கள் கழித்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மண்ணின் வளம் மிகவும் மேம்பட்டு தரமும் உயர்கிறது. இதனால் நெல் பயிர்கள் அறுவடை வரை பசுமை மாறாமல் இருக்கும்.

நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் செயல்பாடும் நன்றாக இருக்கும். மேலும் தா.பழூர் வட்டாரத்தில் பாசன வசதியுடன் விவசாயிகள் நெல் சம்பா சாகுபடிக்கு 45 நாட்கள் முன்னதாக 1 எக்டருக்கு 50 கிலோ தக்கைப்பூண்டு அல்லது சணப்பை பசுந்தாளுரப்பயிர் விதைகள் தனியார் கடைகளில் பில்லுடன் விதைகளை வாங்கி உடன் விதைத்து ஆவணங்களை அளித்தால் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் 50 சத மானியத்துடன் ஒரு எக்டருக்கு ரூ.1500க்கு மிகாமல் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவசாயிகள் சணப்பை (அ) தக்கைப்பூண்டு விதைகள் வாங்கி விதைத்து, தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரிடம் ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சம்பா நடவுக்கு முன் வேளாண் அதிகாரி வழிகாட்டல் : தக்கைப்பூண்டு விதைத்தால் அதிக மகசூல் பெறலாம்

சம்பா நடவிற்கு முன் தக்கைப்பூண்டை விதைத்தால் அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். இது குறித்து தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தில் பாசன வசதிபெறும் நிலங்களில் சம்பா நடவிற்கு 45 நாட்கள் முன்னதாக தக்கைபூண்டு (அ) சணப்பை விதைகள் விதைக்க இதுவே ஏற்ற தருணமாகும்.

இதனால் சாண எரு இடவேண்டிய அவசியமில்லை. விதைத்த 35, 45 நாட்களுக்குள் பசுந்தாளுரப் பயிர்களுடன் வயலில் சூப்பர் பாஸ்பேட் உரம் ஏக்கருக்கு 1 மூட்டை வீதம் இட்டு மடக்கி அழுத்தி 5, 7 நாட்கள் கழித்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மண்ணின் வளம் மிகவும் மேம்பட்டு தரமும் உயர்கிறது. இதனால் நெல் பயிர்கள் அறுவடை வரை பசுமை மாறாமல் இருக்கும்.

நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் செயல்பாடும் நன்றாக இருக்கும். மேலும் தா.பழூர் வட்டாரத்தில் பாசன வசதியுடன் விவசாயிகள் நெல் சம்பா சாகுபடிக்கு 45 நாட்கள் முன்னதாக 1 எக்டருக்கு 50 கிலோ தக்கைப்பூண்டு அல்லது சணப்பை பசுந்தாளுரப்பயிர் விதைகள் தனியார் கடைகளில் பில்லுடன் விதைகளை வாங்கி உடன் விதைத்து ஆவணங்களை அளித்தால் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் 50 சத மானியத்துடன் ஒரு எக்டருக்கு ரூ.1500க்கு மிகாமல் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவசாயிகள் சணப்பை (அ) தக்கைப்பூண்டு விதைகள் வாங்கி விதைத்து, தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரிடம் ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**போச்சம்பள்ளியில் விளைச்சல் அதிகரிப்பால் தக்காளி விலை சரிவு**

போச்சம்பள்ளி பகுதியில் தக்காளி விளைச்சல் அதிகரிப்பால், விலை சரிந்துள்ளது. இதனால் விவசாயிகள் தக்காளியை பறிக்காமல் செடியிலேயே விட்டதால் அவை அழுகி வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியில் விவசாயிகள் தக்காளி, கத்திரி, வெண்டை,

முள்ளங்கி உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளை பயிர் செய்து வருகின்றனர். இதில் தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த மாதம் தக்காளிக்கு அதிக விலை கிடைத்தது. இதனால் விவசாயிகள் அதிகளவில் தக்காளி சாகுபடி செய்தனர். தற்போது தக்காளி விளைச்சல் அமோகமாக உள்ளது.

இதனால் விலை குறைந்துள்ளது. ஒரு கிலோ தக்காளி ரூ.3க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து விவசாயிகள் கூறுகையில், செடி வாங்கி குச்சி நட்டு கயிறு கொண்டு நிறுத்துவது, உரம், மருந்து செலவுகள் என ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவாகிறது. தற்போது அறுவடையில் ரூ.5 ஆயிரம் மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் ஏக்கருக்கு 20 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விளைச்சல் அதிகரிப்பால், வரத்து அதிகமாகி தக்காளி விலை குறைந்துள்ளது. நஷ்டம் காரணமாக, தக்காளியை பறிக்க ஆள்கூலி கூட தரமுடியாத நிலையில் கஷ்டப்பட்டு வருகிறோம். இதனால் தக்காளியை பறிக்காமல் தோட்டத்திலே விட்டு வைத்துள்ளோம். இப்பகுதியில் உள்ளவர்கள் வந்து வீடுகளுக்கு பறித்து செல்கிறார்கள் என்றனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 500 எக்டேர் பரப்பளவில் நேரடி : நெல் விதைப்பு செயல் விளக்கம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் 500 எக்டேர் பரப்பளவில் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு செயல்விளக்கம் செயல்படுத்தப்பட உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், காரவயல் கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நேரடி நெல் விதைப்பு கருவி இணைக்கப்பட்ட டிராக்டரை இயக்கி, நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கத்தினை கலெக்டர் கணேஷ் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசுகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நேரடி நெல் விதைப்பு மூலம் சுமார் 31,000 எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. அறந்தாங்கி வட்டாரத்தில் மட்டும் சுமார் 7400 எக்டர் பரப்பளவில் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளப்படும். நேரடி நெல் விதைப்பில் கூடுதல் மகசூல் பெற தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு தொகுப்பு செயல்விளக்கத் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 500 எக்டர் பரப்பளவில்

செயல்படுத்தப்படவுள்ளது.

அறந்தாங்கி வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 150 எக்ேடர் பரப்பளவில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நேரடி நெல் விதைப்பு தொகுப்பு செயல் விளக்கம் அமைக்கப்படவுள்ளது. இதில் அறந்தாங்கி வட்டாரம் காரவயல் கிராமத்தில் நேரடி நெல் விதைப்பு செயல் விளக்கம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் காரவயல் கிராமத்தில் இத்திட்டத்தின் கீழ் 33 எக்டேர் பரப்பளவில் 42 விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்ப செயல் விளக்கத் திட்டத்திற்கான இடுபொருட்களும் மானிய விலையில் ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இச்செயல் விளக்கத்திற்கு தேவையான உயர் விளைச்சல் நெல் ரக விதைகள், திரவ நுண்ணுயிர் உரங்கள், நெல் நுண்ணூட்டக் கலவை ஆகிய இடுபொருட்கள் மானியத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. செயல் விளக்கத்திற்கு பயன்படுத்தப்படும் களைக்கொல்லி, பயிர் பாதுகாப்பு மருந்துகள், விதைப்பு கருவி வாடகை, துவரை ஓரப் பயிர் ஆகிய இனங்களுக்கு விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக விவசாயிகள் வங்கி கணக்கில் செலுத்தப்படுவதுடன் இச்செயல் விளக்கத்திற்கு ஒரு எக்டேருக்கு ரூ.7,500 மதிப்பிலான மானியமும் வழங்கப்படுகிறது.

எனவே அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் அரசின் சலுகைகளை பெற்று நேரடி நெல் விதைப்பு மேற்கொண்டு அதிக மகசூலைப் பெற்று பயன்பெற வேண்டும் என்று கலெக்டர் கணேஷ் தெரிவித்துள்ளார். நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர் .

**அரசு அறிவித்த கொள்முதல் விலையை தனியார் ஆலை வழங்க மறுப்பு கரும்பு சாகுபடியை கைவிடும் விவசாயிகள்**

தமிழக அரசு அறிவித்த கரும்புக்கான கொள்முதல் விலையை தனியார் சர்க்கரை ஆலை வழங்க மறுத்து வருவதால், திருச்செங்கோடு மற்றும் பள்ளிபாளையம் பகுதியை சேர்ந்த கரும்பு விவசாயிகள் கரும்பு நடவை கைவிட்டுள்ளனர். நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, பள்ளிபாளையம், குமாரபாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஆண்டுதோறும் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிடுவது வழக்கம்.

அறுவடை செய்யப்படும் கரும்பை, பள்ளிபாளையத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையில் விவசாயிகள் விற்பனை செய்வது வழக்கம்.

ஆனால் கடந்த டிசம்பர் மாதம் முதல் ஆலை நிர்வாகம், கரும்புக்கான உரிய தொகையை சரிவர பட்டுவாடா செய்யவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் உரிய தொகையை பெற முடியாமல் தவித்து வருகின்றனர். இப்பிரச்னையால் நடப்பாண்டில் பெரும்பாலான விவசாயிகள் கரும்பு பயிரிட ஆர்வம் காட்டவில்லை. இந்த பருவத்தில் 10 ஆயிரம் ஏக்கருக்கும் குறைவாகவே கரும்பு பயிரிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

ஆள் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை, தொழிலாளர்கள் கூலி உயர்வு போன்ற பல்வேறு பிரச்னையில் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். இந்நிலையில், ஒரு டன் கரும்பு கொள்முதல் விலை ரூ.2,550 என அரசு அறிவித்த பிறகும், முந்தைய ஆண்டு நிர்ணயித்த தொகையையே தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்கியது. அதாவது ஒரு டன் கரும்புக்கு ரூ.2,250 மட்டுமே எங்களுக்கு கிடைக்கிறது. மொத்த தொகையும் முழுமையாக கைக்கு கிடைக்காத நிலை நீடித்து வருகிறது. இதனால் கரும்பு பயிரிடும் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும், போராட்டங்கள் நடத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே கரும்பு பயிரிடுவதை கைவிட்டு, நடப்பாண்டில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்வது குறித்து ஆலோசித்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இப்பிரச்னை குறித்து தனியார் சர்க்கரை ஆலை உதவி மேலாளர் ஒருவர் கூறுகையில், 'விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் ஒரு டன் கரும்புக்கு, மத்திய அரசு ரூ.2,200, மாநில அரசு ரூ.350 வழங்க வேண்டும். மத்திய அரசு அளிக்கும் தொகையானது, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கிடைத்து வருகிறது. ஆனால் மாநில அரசு வழங்குவதில்லை.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு மட்டுமே, மாநில அரசு நிதி வழங்குகிறது. இருப்பினும், மத்திய அரசு கடந்த ஆண்டு நிர்ணயம் செய்த ரூ.2,250 மற்றும் போக்குவரத்து செலவு ரூ.200 என மொத்தம் ஒரு டன் கரும்பிற்கு ரூ.2,450ஐ விசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். தனியார்

ஆலைகளுக்கு மாநில அரசு நிதி வழங்கினால், விவசாயிகளுக்கு நிலுவை தொகையுடன் சேர்த்து வழங்கப்படும்,' இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டுறவு சங்கத்தில் 2,900 பருத்தி மூட்டை ரூ.60 லட்சத்துக்கு விற்பனை
நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் பல்வேறு பகுதியை சேர்ந்த விவசாயிகள் 2,900 பருத்தி மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். இதில், கோவை, திருப்பூர், கரூர், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று ஏலம் எடுத்தனர். ஆர்சி ரகம் ஒரு குவிண்டால் ரூ.5,799 முால் ரூ.6,330 வரையும், சுரபி ரகம் ஒரு குவிண்டால் ரூ.5849 முதல் 6,399 வரையும் ஏலம் போனது. இதன்மூலம் மொத்தம் ரூ.60 லட்சத்துக்கு விற்பனை நடந்தது.

**ரூ.1.55கோடிக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1 கோடியே 55 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் பெருந்துறை, சென்னிமலை, காஞ்சிக்கோவில் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் 5 ஆயிரத்து 842 மூட்டைகளில் 2 லட்சத்து 90 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.53. 75க்கும், அதிகபட்சமாக ரூ.56.55க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.43.15க்கும், அதிகபட்சமாக ரூ.53.55க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.1 கோடியே 55 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

**பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்திற்கு இன்று தண்ணீர் திறப்பு**

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து நேரடியாக கீழ்பவானி வாய்க்கால் பாசனமும், பவானி ஆற்றின் மூலமாக தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனமும், காலிங்கராயன் வாய்க்கால் பாசனமும் இருந்து வருகிறது. இதில் கீழ்பவானி வாய்க்கால் மூலமாக 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கரும், காலிங்கராயன் வாய்க்கால் மூலமாக 15 ஆயிரத்து 743 ஏக்கரும், தடப்பள்ளி-அரக்கன்கோட்டை வாய்க்கால் மூலமாக 24 ஆயிரத்து 505 ஏக்கரும் பாசனம் பெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் காலிங்கராயன்,

தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்திற்கு ஜூன் மாதமும், கீழ்பவானி பாசனத்திற்கு ஆகஸ்ட் 15ம்தேதியும் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாத நிலையில் குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. கீழ்பவானி பாசனத்திற்கு ஆகஸ்ட் 15ம்தேதி தண்ணீர் திறக்கப்பட வேண்டும் என்பதால் இந்த பாசனத்தை சேர்ந்த விவசாயிகள் 3 பாசனத்திற்கும் ஒரே நாளில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். மேலும் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி தண்ணீர் திறக்ககோரி வரும் 23ம்தேதி ஆர்ப்பாட்டம் நடத்த விவசாய சங்கத்தினர் முடிவு செய்திருந்தனர். ஆனால் முதல்வர் ஜெயலலிதா நேற்று பவானிசாகர் அணையில் இருந்து முதல்போகத்திற்கு தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்திற்கும், காலிங்கராயன் பாசனத்திற்கும் 12ம்தேதி (இன்று) தண்ணீர் திறக்க உத்தரவிட்டுள்ளார். இதனால் கீழ்பவானி விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர். தற்போது பவானிசாகர் அணையில் 7.23 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே உள்ளது. அணைக்கு நீரின் வரத்து 200 கனஅடியாகவும், நீர் திறப்பு 1,300 கனஅடியாகவும் உள்ளது. இருபாசனங்களுக்கு அணையில் இருந்து நீர் திறக்கப்படவுள்ள நிலையில் கீழ்பவானி பாசனத்திற்கு ஆகஸ்ட் 15ம்தேதி தண்ணீர் திறப்பது தொடர்பாக அறிவிப்பு வெளியாகுமா என விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர்.

**சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்தில் பவர் டில்லர் வேளாண் உதவி இயக்குநர் தகவல்**

வாடிப்பட்டி வேளாண் வட்டாரத்தில் உள்ள சோழவந்தான், நாச்சிகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள நெல் விற்பனை கிடங்குகளில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிலோவுக்கு ரூ.10 மானியத்தில் நெல் விதை ரகங்களான சி.ஓ 51, ஏ.எஸ்.டி 16, என்.எல்.ஆர் 34449 ஆகிய விதை நெல் போதிய அளவில் இருப்பு உள்ளது. மேலும் திருந்திய நெல் சாகுபடி முறையில் இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூ.5000 மானியம் வழங்கப்படுகிறது. மண் வளத்தை பெருக்கும் நோக்கத்திற்காக தக்கைபூண்டு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் ஏற்பு மானியம் வழங்கப்படுகிறது. சிறு குறு, பெண் மற்றும் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரம் மானியத்தில் பவர் டில்லர் (சின்ன டிராக்டர்) வழங்கப்படுகிறது. தேசிய எண்ணெய் வித்து இயக்கத் திட்டத்தில் மானாவாரி நிலங்களில் எண்ணெய் வித்து மரப் பயிர்களான வேம்பு, இலுப்பை ஆகியவை சாகுபடிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களை வாடிப்பட்டி வட்டார

விவசாயிகள் பயன்படுத்தி பயன்பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் முருகேசன் தெரிவித்தார்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை**

கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கலெக்டர் அண்ணாதுரை எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தஞ்சை மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களில் உள்ள உரக்கடைகளில் தரமான உரங்கள் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்க வேளாண்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது பல்வேறு நிறுனங்களின் உரங்களின் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ள விவரத்தின்படி உரங்களை விற்பனை செய்ய வேளாண்மைத்துறை மூலம் அனைத்து உரக் கடைகளுக்கும் உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. உரக்கட்டுப்பாடு ஆணை 1985ன்படி அறிவிப்பு செய்யப்பட்ட விலைக்கு மீறி விற்பனை செய்யும் உரக்கடைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது, குறுவை மற்றும் சம்பா பருவத்திற்கு தேவைப்படும் அனைத்து உரங்களும் கூட்டுறவு மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உரக்கட்டுப்பாடு ஆணை 1985ன்படி உர உரிமம் பெற்று விற்பனை செய்வது உர மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள விலைக்கு மிகாமல் விற்பனை செய்வது போன்ற விதிமுறைகளை அனைத்து கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர்கள் கடைபிடிக்க வேண்டும்.

உர இருப்பு விவரம் மற்றும் விலை விவரம் குறிப்பிட்டு விலை விவரப் பலகை அனைவருக்கும் நன்கு தெரியும் விதத்தில் வைக்கப்பட வேண்டும். அறிவிப்பு செய்யப்பட்ட உரங்களின் விற்பனை விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி விவசாயிகள் உரங்கள் வாங்கும்போது ரொக்கப்பட்டியல் கேட்டு பெற வேண்டும். கையொப்பமிட்டு வாங்க வேண்டும். பட்டியல் இடாமல் விற்றால் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண்களிலோ தெரிவிக்கலாம்.

தஞ்சாவூர் 9750969401, பூதலூர் 9750969402, திருவையாறு 9750969403, ஒரத்தநாடு

9750969404, திருவோணம் 9750969405, பட்டுக்கோட்டை 9750969406, மதுக்கூர் 9750969407, பேராவூரணி 9698580420, சேதுபாவாசத்திரம் 9750969409, பாபநாசம் 9750969410, அம்மாப்பேட்டை 9750969411, கும்பகோணம் 9750969412, திருவிடைமருதூர் 9750969413, திருப்பனந்தாள் 9750969414 என்ற கைபேசி எண்களில் தொடர்பு கொண்டு புகார் செய்யலாம். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

தினமணி

**பவானிசாகர் அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**

பவானிசாகர் அணையில் இருந்து வெள்ளிக்கிழமை முதல் தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால்கள், காலிங்கராயன் வாய்க்கால் பழைய ஆயக்கட்டு நிலங்கள் ஆகியவற்றின் முதல் போக பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைள் வந்துள்ளன.

இந்த கோரிக்கைகளை ஏற்று, முதல் போக பாசனத்துக்கு வெள்ளிக்கிழமை (ஆக. 12) முதல் தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளேன். இதனால், ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோபிசெட்டிபாளையம், அந்தியூர், பவானி வட்டங்களில் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால்கள் மூலம் 24 ஆயிரத்து 504 ஏக்கர் நிலங்களும், ஈரோடு வட்டத்தில் காலிங்கராயன் வாய்க்கால் மூலம் 15 ஆயிரத்து 743 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும் என்று தனது அறிவிப்பில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## 50 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல் நடவு: வேளாண் இணை இயக்குநர் தகவல்

மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல் நடவு சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குநர் புதன்கிழமை தெரிவித்தார்.

திண்டிவனத்தை அடுத்த கட்டளை கிராமத்தில் இயந்திர நெல் சாகுபடி திட்டத்தை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராமலிங்கம் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியது: தமிழகத்தில் நடப்பாண்டு 147 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழக அரசு வேளாண் துறை எடுத்து வருகிறது.

உணவு தானிய உற்பத்தியை அதிகரித்திட அதிக மகசூல் தரும் புதிய ரகங்களுக்கு கிலோவுக்கு ரூ. 10 மானியம், பசுந்தாள் உர சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 1500 மானியம், வரப்பில் உளுந்து சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ. 100 மானியத்தில் உளுந்து விதைகள், மானிய விலையில் இயந்திரக் கருவிகள் உள்ளிட்டவை தேசிய வேளாண் திட்டத்தில் வழங்கப்படுகிறது.

அதன் ஒரு பகுதியாக இயந்திர நெல் சாகுபடி திட்டத்தை அரசு வேளாண் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

மாவட்டத்தில் சுமார் 4 லட்சம் ஏக்கரில் சொர்ணவாரி, சம்பா மற்றும் நவரை பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டு 50 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல் நடவு செய்யத் திட்டமிட்டப்பட்டு அனைத்து வட்டாரங்களிலும் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

இயந்திர நெல் சாகுபடி திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரம் அரசு மாணியம் வழங்குகிறது. மாவட்ட விவசாயிகள் இதனைப் பயன்படுத்தி, தானிய உற்பத்தியை அதிகரித்திட வேண்டும் என்றார்.

வேளாண் துறை அலுவலர்கள் சுப்பிரமணியன், செந்தில்குமார், சந்துரு, வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் ஆகியோர் விவசாயத் தொழில்நுட்ப சம்பந்தமாக விளக்கமளித்தனர். கட்டளை, குருவம்மாபேட்டை உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**தண்ணீர் தேங்கும் பள்ளக்கால் பகுதிகளுக்கேற்ற நெல் ரகம்**

தண்ணீர் தேங்கும் பள்ளக்கால் பகுதிகளுக்கேற்ற நெல் ரகம் சிஆர் 1009 சப் 1 என நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய முனைவர் இராஜா.ரமேஷ் மற்றும் முனைவர் ரெ.பாஸ்கரன் ஆகியோர் பரிந்துரைத்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, பெரம்பலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய காவிரி டெல்டாவில் மட்டும் சம்பா பருவத்தில் அதிக பரப்பளவாக 4.1 லட்சம் எக்டரிலும், தாளடி பருவத்தில் 1.2 லட்சம் எக்டரிலும் நெல் பயிரிடப்படுகிறது.

வடகிழக்குப் பருவமழையின்போது காவிரி டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதிகளில் தண்ணீர் அதிகமாக தேங்கி நிற்கும் சூழல் உருவாகும். அத்தருணங்களில் தண்ணீர் தேங்குவதால் நெற்பயிருக்குப் பாதிப்பு உண்டாகி விளைச்சல் பாதிக்கும்.

எனவே, இதை தவிர்ப்பதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் 15 நாட்கள் வரை நெற்பயிரானது வெள்ளத்தால் சூழ்ந்திருந்தாலும் எவ்விதப் பாதிப்புமின்றி வளரும் சிறப்புடைய சிஆர் 1009 சப் 1 என்ற ரகத்தை வெளியிட்டுள்ளது. இந்த ரகமானது சம்பா பருவத்திற்கு மிகவும் ஏற்றது ஆகும்.

சிஆர் 1009 சப் 1 ரகத்தின் சிறப்புகள் இந்த ரகமானது 155-160 நாட்கள் வயதுடையது. நீண்ட கதிர்களில் குறுகிய பருத்த மணிகளைக் கொண்டது. எக்டருக்கு 5,759 கிலோ மகசூல் தரவல்லது. 1000 மணிகள் எடை 23.5 கிராம் ஆகும்.

அதிக அரவைத்திறனும் முழு அரிசி காணும் திறனும் கொண்டது. அதிக மாவுச்சத்து உள்ளதால் இட்லி தயாரிப்பதற்கு சிறந்தது. நேரடி விதைப்பிற்கும் ஏற்ற ரகம்.

புகையானுக்கு எதிர்புத்திறன் கொண்டது. இலைப்புள்ளி, குலைநோய், வெண்முதுகு தத்துப்பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது என்றனர்.

## வெற்றிலைக் கட்டுக்களின் விலை அதிகரிப்பு



பொதுமக்கள் தாம்பூலமாகப் பயன்படுத்தும் வெற்றிலையின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதேபோல், கடந்த மாதம் வரையில் ஒரு கட்டு வெற்றிலை ரூ.80-க்கு விற்பனை செய்த நிலையில், தற்போது ரூ.240 முதல் ரூ.250 வரையில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் கிராமங்கள் தொடங்கி நகரங்கள் வரை திருமணம், நீராட்டு விழா உள்ளிட்ட நிகழ்ச்சிக்கு வந்து செல்லும் விருந்தினர்களுக்கு விருந்து முடிந்ததும் வெற்றிலை - பாக்கு வழங்குவது என்பது பாரம்பரியமாக இருந்து வரும் முக்கிய நிகழ்வாகும். மேலும், மருத்துவக் குணங்களைக் கொண்ட வெற்றிலைகள் கோயில் திருவிழாக்கள், திருமணம் உள்ளிட்ட மங்கள காரியங்களுக்கு தாம்பூலமாக பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

இதுபோன்ற சிறப்புகளைக் கொண்ட வெற்றிலைக் கட்டுக்கள் தஞ்சாவூர், கும்பகோணம் சுற்றுப் பகுதிகள், நாமக்கல், பரமத்தி வேலூர் வட்டார பகுதிகள், தேனி, சின்னமனூர், கூடலூர், திருச்சி, தொட்டியம், வேலூர், மதுரை, சோழவந்தான் உள்ளிட்ட பகுதிகளிலும், அதேபோல் ஆந்திரத்தைச் சேர்ந்த சூளூர்பேட்டை, நெல்லூர், தெலங்கானா ஆகிய பகுதிகளிலும் அதிகளவில் பயிரிடப்படுகிறது.

அதனால் மேலே குறிப்பிட்ட பகுதிகளிலிருந்தே கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நாள்தோறும் 5 லாரி லோடு வரையில் வெற்றிலை விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. ஆனால், கடந்த வாரம் முதல் 3 லாரி லோடுகளாக வெற்றிலைக் கட்டுக்கள் குறைந்துள்ளது. இதனால்

வெற்றிலையின் விலையும் தவிர்க்க முடியாத காரணத்தால் உயர்ந்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து புதூர் பகுதியைச் சேர்ந்த வெற்றிலை வியாபாரி மாரியப்பன் கூறியதாவது: கடந்த 3 மாதம் வரையில் ஒரு கட்டு வெற்றிலை ரூ.60 முதல் ரூ.80-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது வெற்றிலையின் தரத்திற்கேற்ப ரூ.180 முதல் முதல் ரூ.200 வரையில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது, ஆடிமாதம் என்பதால் வழிபாட்டுக்கு உகந்த மாதமாகவும், எனவே முக்கிய வழிபாடு நாள்களாக இருப்பதால் பொதுமக்களுக்கு வெற்றிலையின் தேவையும் அதிகரித்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது. எனவே அடுத்து வரும் நாள்களில் வெற்றிலை கட்டுக்களின் விலை குறைவதற்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மல்லிகைப்பூ விலை உயர்வு:

கடைசி ஆடிவெள்ளி, வரலட்சுமி விரதம் இன்று (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. அதனால் சென்னை கோயம்பேடு பூ மார்க்கெட்டில் வியாழக்கிழமை பூஜை பொருள்கள் வாங்குவதற்கு கூட்டம் அலைமோதியது. இந்த நிலையில், மல்லிகைப் பூ விலை கடந்த 2 நாள்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.100-க்கு விற்பனையானது. தற்போது ரூ.300 ஆக உயர்ந்துள்ளது. மேலும் வரலட்சுமி பூஜைக்கான பொருள்களான வாழைக்கன்று, தாழம்பூ, தாமரைப்பூ, தென்னம்பாளை உள்ளிட்ட பொருள்களின் விலை ரூ.5 முதல் ரூ.10 வரையில் கூடுதலாக விற்பனையானது.

## 3 மாவட்டங்களில் வீட்டு மூலிகைத் தோட்டம்: பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

தமிழகத்தில் சேலம், தருமபுரி, நாமக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் வீட்டில் மூலிகைத் தோட்டம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ், வியாழக்கிழமை அவர் படித்தளித்த அறிக்கை: நாட்டில் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் வனம்-மரங்களின் அளவு அதிகரித்துள்ளது. 5 ஆயிரத்து 640 பூக்கும் தாவர வகைகளை தமிழகம் கொண்டுள்ளது. இவற்றில் 230 தாவர வகைகள் அழியும் நிலையில் உள்ளன. இவை பாதுகாக்கப்பட வேண்டும்.

எனவே சென்னையை அடுத்துள்ள வண்டலூர் உயிரியல் பூங்கா அருகே வண்டலூர்-கேளம்பாக்கம் செல்லும் சாலையில் உள்ள வன ஆராய்ச்சிப் பிரிவு மூலம் மரப்பூங்கா ஏற்படுத்தப்படும். வன மரபியல் வளங்களைப் பாதுகாக்க 8 ஹெக்டேர் பரப்பில் மேற்குத் தொடர்ச்சி முதல் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வளர்ந்து வரும் 300 மரத்தாவர வகைகள் ஓரிடத்தில் வளர்க்கப்பட்டு மரபியல் வளங்கள் கொண்டதாக இந்தப் பூங்கா விளங்கும்.

இந்த மரப்பூங்கா மரபியல் வளங்களைப் பாதுகாப்பதுடன், தாவரவியல் வல்லுநர்களின் சொர்க்கமாகவும் திகழும்.

வன மர விதை மையம்: கோவை வன மரபியல் தோட்டத்தில் அரசு விதை மையம் உள்ளது. இங்கு நவீன கருவிகளைக் கொண்டு விதைகளின் தரத்தினை ஆய்வு செய்து 250 வகையான விதை வகைகள், முறைப்படுத்தப்பட்ட தாவர வளர்ப்பு தொழில்நுட்பங்களை இந்த மையம் செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் மத்திய பகுதிகள், டெல்டா மாவட்டங்களுக்கு மரபியல் தரம் வாய்ந்த, உயர்தர மர விதைகள் வழங்குவதை அவசியம் எனக் கருதி திருச்சியில் நவீன வன மர விதை மையம் ஏற்படுத்தப்படும். இந்த மையம் மாநிலத்தில் விதை சேமிப்பு, ஆய்வு, தரப்படுத்துதல், குளிர்ந்த அறைகளில் சேமித்தல், வழங்குதலுக்கான நவீன தொழில் வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

இந்த மையம் ஒரு ஹெக்டேர் பரப்பில் ஏற்படுத்தப்படும். விவசாயிகள், தொழிற்சாலைகள், துறைகள், இதர பயனாளிகளுக்கு அரிய, அருகி வரும், அழிந்து வருகின்ற மருத்துவச் செடிகளின் தேவையை பூர்த்தி செய்யும் மையமாக அது திகழும்.

வீட்டில் மூலிகைத் தோட்டம்: வனங்களின் அருகிலுள்ள கிராமங்களில் மருத்துவச் செடிகள் பயிரிட பெண்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும். இதன்படி, பெண்கள் தொழில் முனைவோர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, இந்தக் குழுக்கள் மூலம் மருத்துவச் செடிகள் பயிரிடப்பட்டு விற்பனை செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வீட்டில் மூலிகைத் திட்டம் அமைக்கும் இந்தத் திட்டம் முதல் கட்டமாக, சேலம், தருமபுரி, நாமக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

வண்டலூர் விலங்குகள் நடமாட்டத்தை இணையத்தில் பார்க்கலாம்

வண்டலூரில் விலங்குகள் நடமாட்டத்தை இணையதளத்தின் மூலம் பார்க்கலாம் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ், முதல்வர் ஜெயலலிதா வியாழக்கிழமை படித்தளித்த அறிக்கை: வண்டலூர் உயிரியல் பூங்காவில் 20 முக்கிய உயிரின குடில்களில் உள்ள விலங்குகளை தொலைதூரத்தில் இருக்கும் விருப்பமுள்ள மக்கள் 24 மணிநேரமும் கண்டுகளிக்கலாம்.

இதற்கென அகச்சிவப்பு கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டு இணையதளத்தின் மூலமாக ஒளிபரப்பப்படும். இந்தத் திட்டம் ரூ.50 லட்சத்தில் செயல்படுத்தப்படும். இதன் மூலமாக உயிரியல் பூங்கா நிர்வாகமும் உயிரினக் குடில்களில் உள்ள வனவிலங்குகளைக் கண்காணிக்க முடியும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

தினமலர்

**பவானிசாகர் இன்று திறப்பு**

விவசாயிகள் எதிர்ப்பு : கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி கூறியதாவது:

காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி, பவானிசாகர் அணையில், நீர் நிர்வாகம் செய்ய வேண்டும். தற்போது, அணையில், 7.7 டி.எம்.சி., நீர் உள்ளது. இறுதி தீர்ப்பின் படி, இதில், 1.4 டி.எம்.சி.,யை, பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு பயன்படுத்த வேண்டும். மீதமுள்ள நீரை, கீழ்பவானி விவசாயிகளின் பாசனத்திற்கு வழங்க வேண்டும்.

ஆனால், தீர்ப்பை மதிக்காமல், தற்போது அணையில் இருந்து, நீர் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாயப்பட்டறைகள் பயன்பாட்டிற்காகவே, தற்போது, நீர் திறக்கப்பட்டுள்ளது. எனவே, அணையை திறக்க கூடாது என்று, வேளாண் துறை அமைச்சர் துரைக்கண்ணுவிடம், வலியுறுத்தி இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

பவானிசாகர் இன்று திறப்பு

சென்னை: "திருச்சியில், நவீன வன மர விதை மையம்; வண்டலுாரில் மரப்பூங்கா, தலா, இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்," என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். சட்டசபையில், 110 விதியின் கீழ், அவர் வெளியிட்டுள்ள அறிவிப்புகள்:

• சென்னை அடுத்த, வண்டலுார் - கேளம்பாக்கம் சாலையில் உள்ள, வன ஆராய்ச்சி பிரிவு மூலமாக, வன மரபியல் வளங்களை பாதுகாக்க, 20 ஏக்கர் பரப்பளவில், 300 மரத் தாவர வகைகள் வளர்க்கப்பட்டு, மரப்பூங்கா, இரண்டு கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

• தமிழகத்தின் மத்திய பகுதிகள் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு, மரபியல் தரம் வாய்ந்த, உயர்தர மர விதைகள் வழங்கும் அவசியத்தை கருத்தில் கொண்டு, திருச்சியில், 'நவீன வன மர விதை மையம்' ஏற்படுத்தப்படும்

• இம்மையம், மாநிலத்தில் விதை சேகரம், ஆய்வு, தரப்படுத்துதல், குளிர்ந்த அறைகளில் சேமித்தல் என, நவீன தொழில் வசதிகளை கொண்டதாக இருக்கும். இது, இரண்டு கோடி ரூபாயில், 2.45 ஏக்கர் பரப்பளவில்
ஏற்படுத்தப்படும்

• விவசாயிகள், தொழிற்சாலைகள், துறைகள் மற்றும் இதர பயனாளிகளுக்கு, மருத்துவச் செடிகளின் தேவையை பூர்த்தி செய்யும் மையமாகவும் திகழும்

• வனங்களின் அருகில் உள்ள கிராமங்களில், மருத்துவ செடிகள் பயிரிட, பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். பெண் தொழில் முனைவோர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, மருத்துவ செடி விற்பனை பணிகள் மேற்கொள்ளப்படும்

• வீட்டில் மூலிகை தோட்டம் அமைக்கும் திட்டம், முதற்கட்டமாக, சேலம், தர்மபுரி, நாமக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்

• வண்டலுார் உயிரியல் பூங்காவில் உள்ள, 20 முக்கிய குடில்களில் உள்ள விலங்குகளை, தொலைதுாரத்தில் இருக்கும் மக்கள், 24 மணி நேரமும் கண்டுகளிக்கும் நோக்குடன், 'இன்பராரெட்' கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டு, இணையதளத்தில் ஒளிபரப்பப்படும்.

இத்திட்டம், 50 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் பூங்கா நிர்வாகமும், வனவிலங்குகளை கண்காணிக்க இயலும்.
இவ்வாறு முதல்வர்
அறிவித்தார்.

### காட்டு மாடு உடலில் உள்ள ஒட்டுண்ணிகளால் தோல்நோய் : விவசாயிகளுக்கு பாதிப்பு

கொடைக்கானல்: காட்டு மாடு உடலில் உள்ள ஒட்டுண்ணிகளால் தோல் நோய்க்கு

ஆளாவதாக வனத்துறை அலுவலகத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

கொடைக்கானலில் 100 க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்கள் உள்ளன. இங்கு முக்கிய தொழில் விவசாயம். சில ஆண்டுகளாக விவசாயிகள் தோல்வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் வனவிலங்குகளின் ஒட்டுண்ணிகள் மூலம் பரவுவதாக கீழ்மலை பூலத்துார் கோகுலகிருஷ்ணன் தெரிவித்தார்.இதனை தடுக்க அவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். 2 மாதத்திற்குள் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள சுகாதார துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.பரவும் தோல்நோய்: கீழ்மலைப்பகுதிகளில் காபி, மிளகு, ஆரஞ்சு போன்றவை சாகுபடியாகிறது. காட்டு மாடு உடலில் உள்ள ஒட்டுண்ணிகள் ரத்தத்தை உறிஞ்சி, செடிகொடிகளில் பரவுகின்றது. அவற்றினுாடே பணியாற்றும் பெரியவர் முதல் குழந்தைகள், தோல் நோய்களால் பாதிக்கின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளித்தாலும், முறையாக ஒட்டுண்ணிகள் குறித்து ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என கிராமமக்கள் வலியுறுத்தினர். இதுபற்றிய ஆய்வுக் கூட்டத்தில் சுகாதாரத்துறை துணை இயக்குனர் வரதராஜன், பூச்சியல் வல்லுனர் காசி முஸ்தபா, மாவட்ட வன அலுவலர் முருகன், கால்நடை துறை துணை இயக்குனர் டாக்டர் ஹக்கிம் கலந்து கொண்டனர்.

கோகுலகிருஷ்ணன் கூறுகையில், "வழக்கு சம்பந்தமாக இதுவரை சுகாதாரத்துறை மாவட்ட அளவில் மட்டுமே ஆய்வு மேற்கொண்டுள்ளது.

முறையான மருத்துவ சிகிச்சை அளிக்கவில்லை. ஒட்டுண்ணியால் ஏற்படும் தோல்வியாதிகள் குறித்து மேல்மட்ட மருத்துவக்குழுவினரை நியமிக்க வேண்டும், என்றார்.